ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவ௵ வைகாசி௴ பகுதி ௫.

Vol 4. *May & June 1927.* No. 5.

## ஞானக்கலை.

உலகில் வாழும் மாந்தருக்கு மோக்ஷவிஷயமான நல்லறிவைப் பெறுதற்குச் சாதனமாயிருப்பதெதுவோ அதுவே ஞானக்கலையென்று வழங்கப்பெறும். "மோக்ஷேதீர்ஜ்ஞாநமந்யத்ர * விஜ்ஞாநம் ஶில்ப ஶாஸ்த்ரயோ:" மோக்ஷதீர்ஜ்ஞாநமந்யத்ர விஜ்ஞாநம் சில்ப சாஸ்த்ரயோ:" என்றபடி சில்பாதி இதரசாஸ்த்ரங்களை விஷயமாகக் கொண்ட அறிவிற்கு விபரீதஜ்ஞாநமென்றுபெயர். ஆகவே இந்த விபரீதஜ்ஞாநத்திற்குவிஷயமாயிருக்கிற நூலெதுவோ அதுவே உலகநூலென்று வழங்கலாகும். உலகநூல் உலகவாழ்க்கைக்குச் சாதனமாயிருந்தாலும் இது, பிறவிப்பிணியை அறுத்து நிலைநின்ற பயனைப் பெறுதற்குரிய ஹிதமான அறிவைப் பிறப்பிக்காததினால் சிறந்ததில்லை யென்று ஆன்றோரால் எடுத்துக் கழிக்கப்படுகிறது.

"அலகுசால்கற்பினறிவுநூல்கல்லாது
உலகநூலோதுவதெல்லாம்—கலகல
கூஉந்துணையல்லாற்கொண்டுதடுமாற்றம்
போஒந்துணையறிவாரில்"

என்பதனாலும் உலகநூல் பிறந்திறந்துழலும் தடுமாற்றத்தை ஒழித்தற்குச் சாதனமாகாதென்ப தறியலாகும். இதுநிற்க, யாதொன்றை அறிந்தால் எல்லாமறிந்ததாமோ அதையறியுமறிவே அறிவாகும்.

* விபரீதஜ்ஞாநம் விஜ்ஞாநம் (விபரீதஜ்ஞாநம்)

அவ்வறிவே இங்கு மோக்ஷவிஷயமான அறிவென்று குறிப்பிடப் பட்டது. மோக்ஷவிஷயமான ஜ்ஞாநமாவது:—மோக்ஷத்தையடை விக்கின்ற ப்ரஹ்மஜ்ஞாநமாம்.

இனி, ப்ரஹ்மத்தை யறிந்தமாத்திரத்தால் எல்லாமறியப்பட்ட தாமென்பது நிரூபிக்கப்படும்.

> "சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின்
> வகைதெரிவான்கட்டேயுலகு"

இங்கு ப்ரக்ருதிதத்வமுட்பட இருபத்தைந்து தத்வங்களையும் ஆராய் வான் அறிவினிடத்ததாம் உலகமென்று சொல்லப்பட்டது. அறிவி னிடத்ததாம் உலகு என்பதற்குப்பரிமேலழகர் 'இவ்விருபத்தைந்து மல்லது உலகெனப் பிறிதொன்றில்லையென உலகினதுண்மையறி தலின் அவனறிவின்கண்ணதாயிற்று' என்று தெளிவுரை கூறினர். இதனால் ஆத்மஜ்ஞாநியின் அறிவுக்கு உலகம் விஷயமாமென்றறியத் தக்கது. ஆத்மாவையும், ப்ரக்ருதியையும் தனக்குச் சரீரமாய்க் கொண்டு எல்லாருக்கும் நியந்தாவாய் ஒத்தாரு மிக்காருமில்லாதவ னாய், 'கரந்தசில்லிடந்தொறும் இடந்திகழ் பொருடொறுங் கரந் தெங்கும்பரந்துள' னாகிய பரமாத்மாவை அறிந்தால் எல்லாமறிந்த தாய்விடுமன்றே. பரமாத்மாவின் மிக்கதோர் பொருளில்லாதது போல அவனை விஷயமாகக்கொண்ட அறிவால் அறியப்படாத எஞ்சியபொருள் ஒன்றுமில்லை. இதனால் ப்ரஹ்மஜ்ஞாநியின் அறிவு எல்லாவற்றையும் விஷயமாகக்கொண்டிருக்குமென்றறியத்தக்கது. மேலும்,

> "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில்பெரும்பாழயோ
> சூழ்ந்ததனில்பெரியபரநன்மலர்ச்சோதீயோ
> சூழ்ந்ததனில்பெரியசுடர்ஞானவின்பமேயோ
> சூழ்ந்ததனில்பெரியஎன்னவா........."

என்று ஆழ்வார் தமது பக்தியின் எல்லை கூறவந்தவிடத்து அது, சித்து அசித்து ஈசுவரன் என்றமூன்று தத்வங்களையும் விளாக்குலை கொண்டுளது என்று அருளிச்செய்தார். ஜ்ஞாநத்திலிருந்துபிறந்

தது பக்தியாதலால் பக்திவிஷயமாகக்கொள்வதையும் ஜ்ஞாந விஷயமாகவும் கொள்ளலாம். கொள்ளவே ஆழ்வாருடைய ஜ்ஞாநத்திற்கு விஷயமாகிய ப்ரஹ்மம் தன்னின் மிக்கதொன்றின்றாய் எல்லாவற்றையும் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டிருப்பதுபோல அவனை விஷயமாகக்கொண்ட இவரது ஜ்ஞாநத்திற்கு விஷயமாகாது மிக்கதோர் பொருளின்றாய் இது, எல்லாவற்றையும் தன்வயினடக்கிக் கொண்டிருக்குமென்று ஆராயத்தக்கது. மேலும், திருமழிசையாழ்வார்,

> "சாக்கியங்கற்றோம்சமண்கற்றோம்சங்கரனார்
> ஆக்கியஆகமநூல்ஆராய்ந்தோம்— பாக்கியத்தாற்
> செங்கட்கரியான்ருள்சேர்ந்தியாம்தீதிலமே
> எங்கட்கரியதொன்றில்"

என்று பழுதே பலகலைகளையும் பயின்று, பின் பகவதநுக்ரஹத்தால் அவனையறிந்தபின் தமக்கு இனி அறிதற்கு அருமையான பொருளொன்றுமில்லை என்று அருளியதினாலும் ப்ரஹ்மவிஷயஜ்ஞாநத்தின் பெருமையறியலாகும். '......விண்ணோர் பெருமான்றன்னை, உரிய சொல்லா விசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேற்கு, அரியதுண்டோவெனக் கின்றுதொட்டு மெழுமையுமே" என்று ஆழ்வாரருளியதும் இக்கருத்துடையதேயாம்.

இதுவரை பரமாத்மாவை அறியுமறிவே அறிவாமென்று சொல்லப்பட்டது. இனி அவ்வறிவுக்குச் சாதனமான நூல் இன்னதென்பதும், அது வெளிவந்த வரலாறும் உரைக்கப்பெறும்.

"காருணிகனான ஸர்வேச்வரன் அறிவிலா மனிசர் உணர்வென்னும் சுடர்விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தாவேத விளக்கைக்கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினாலருள்செய்தான்" என்று அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்தபடி அறிவற்ற மாந்தர் ஜ்ஞாநஒளியால் அஜ்ஞாநமாகிய இருட்டை ஒழித்து வேதாந்தத்தில் விளங்குகிற வேதப்ரமாணத்தாலறியப்படும் ஸர்வேசுவரனை ஜ்ஞாநக்கண்ணாலே கண்டு

சம்சாரபந்தம் தீது பகவத்விஷயம் நன்றென்று அறிதற்கு அகாரத்தினின்றும் தோன்றின வேதாதி சாஸ்திரங்களை அருளையுடைய ஸர்வேசுவரன் தன்னியல்பினுல் அருளினன்.

இங்கு ஸர்வேசுவரனுடைய இயல்பைத்தெரிவிக்கின்ற நூல்களே அவனையறியுமறிவுக்குச் சாதனமாயிருக்குமாதலால் இவற்றையும் அவனே வெளியிட்டானென்று சொல்லப்பட்டது. அவனுல் வெளியிடப்பட்ட வேதாதிசாஸ்த்ரங்கள் அகாரத்தினின்றும் தோன்றினமையால் அவை, அகாரம் எல்லாசப்தங்கட்கும் காரணமாயிருப்பதுபோல ஸர்வேசுவரன் ஜகத்காரணமான பொருளென்று கூறும்.

இனி, இந்த ஞானக்கலையைப்பயிலு முறை உரைக்கப்பெறும்.

இதை ஜ்ஞாநாசார்யர்பாற் சென்று அவர் திருவுள்ளமுகக்கும்படிபணிவிடைசெய்து அவர் உபதேசவாயிலாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அக்காளத்தில் எத்தனையோ பேர் இந்த ப்ரஹ்ம வித்யையைக் குருகுலவாசஞ்செய்தே தெரிந்து கொண்டார்களென்று நாமறிகின்றோமல்லவா. உபகோசலர் ப்ரஹ்மவித்யையைப் பெறுதற்கு ஆசார்யராகிய ஜாபாலருக்குப் பன்னெடுநாளும் பணிவிடைசெய்து, பின் ஆசார்யனுடைய நியமனத்தால் மாடு மேய்த்துக்கொண்டிருந்தரர். ஒருநாள் இவர் தம் தலையிலுள்ள ரோமங்கள் வெளுத்திருப்பதைக்கண்டு ‘அந்தோ! நமக்கு இவ்வளவு வயது கழிந்தும் நாம் ப்ரஹ்மஜ்ஞாநத்தைப் பெறவில்லையே; வாழ்நாள் வீணே கழிந்தனவே; நமது ஆசார்யனுடைய திருவுள்ளம் இன்னமும் இரங்கவில்லையே; நாமென்செய்வது’ என்று தமக்குட் சிந்திக்கலாயினர். இது நிற்க; ஜாபாலர் யாககார்யமாகப் பிறிதோரிடத்திற்குச்செல்ல நேர்ந்தபொழுது உபகோசலரை அழைத்து ‘நாம் இங்கு வரும்வரை அக்னிகார்யத்தைச் செவ்வையாகச் செய்துகொண்டிருப்பாயாக’ என்று நியமித்துச் சென்றுர். இவரும் அவருடைய கட்டளையின்படி அக்னியை ஓம்பிக்கொண்டிருந்தபொழுது அக்னி பகவான் இவர்மீதிரக்கங்கொண்டு ப்ரத்யக்ஷமாகி இவருக்கு எல்லாக்கலைகளின் ஜ்ஞாநமுமுண்டாகும்படி அநுக்ரஹம்செய்து ‘ப்ரஹ்மவித்யையை மாத்திரம் உமது ஆசார்யன்வாயிலாகக் கேட்பீராக’

என்றுரைத்துச்சென்றான். பின்னர் ஜாபாலர் உபகோசலருடைய முகவொளியைக்கண்டு நிகழ்ந்துள்ள விஷயத்தை வினவித்தெரிந்து கொண்டவுடன் மனமுகந்து உபகோசலருக்கு ப்ரஹ்மோபதேசஞ் செய்தார். அதன்பின் உபகோசலர் ஸர்வசாஸ்த்ர ஸம்பந்நராய் விளங்கினர்.

இதனால், ஆசார்ய விசுவாச வழிபாடுகளால் இந்த ப்ரஹ்ம வித்யை அடையத்தக்கதாகுமென்பது பெறப்படும். அதனாலன்றோ லோகதேசிகனும் "மந்த்ர ப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்கவுண்டானால் கார்யகரமாவது" என்று அருளிச்செய்தார். இதை, அஹங்காரத்தால் தானே பயின்றுகொள்ளமுயல்வானாகில் அவனுக்கு அறிவு பிறக்கின்றபொழுதே தோஷமுடையதாய்ப் பிறக்கும். அதனால் அவன் கேட்டையடைவானேயன்றி ஒருபோதும் நன்மையடையான். இதைக்குறித்தே பொய்கையாரும் "பழுதின்றி மந்திரங்கள் கற்பனவும்" என்று அருளிச்செய்தார். பழுதின்றிக் கற்கையாவது ஆசார்யன்வாயிலாகப்பயில்கையாம்.

இன்னும், ஆநந்தவல்லி என்ற உபநிஷத் 'ஸர்வேசுவரனுடைய ஆநந்தகுணத்தை அளவிடக்கடவேன்' என்று அஹங்கரித்துச் சென்றதாலன்றோ அது பலவாறுமுயன்றும் பயனடையா தொழிந்தது. ஆழ்வாருக்கு ஸர்வேசுவரனே ஆசார்யனாய்நின்று அருளியதினாலே அவர் "ஆம்வண்ணமின்னதொன்றென்றறிவதரியவரியை, ஆம்வண்ணத்தாற் குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த—" என்றபடி இத்தன்மையினனென்று அறிதற் கருமையுடையவனாகிய ஸர்வேசுவரனது இயல்புகளையெல்லாம் செவ்வையாயெடுத்தோதினர். இதனால், இந்த ஞானக்கலையை ஸ்வயத்னத்தாலே பயிலுதற்கு முற்பட லாகாதென்பது விளங்கும்.

மேலும் இதனை வலியுறுத்தற்கு இங்கு ஒரு ஐதிஹ்யமும் உரைக்கப்படும்.

"எத்திசையுமமரர்பணிந்தேத்துமிருடிகேசன்வலிசெய்ய
முத்தன்னவெண்முறுவற்செய்யவாயுமுலையுமழகழிந்தேன்நான்
கொத்தலர்காவில்மணித்தடங்கண்படைகொள்ளுமிளங்குயிலேயென்
தத்துவனைவரக்கூகிற்றியாகிற்றலையல்லால்கைம்மாறிலேனே.

என்று ஆண்டாள், பிரிவாற்றாமையால் குயிலை நோக்கி, தேவர்களால் கொண்டாடப்படுகிற என் நாயகன் என்விஷயத்திற் செய்த மிடுக்கினால் என்னுடைய அவயவசோபைகளை இழக்கப்பெற்றேன; அங்ஙனஞ்செய்த என்னுயிர்நிலையனாகிய நாயகன் வருமாறு கூவுவையாகில் தலையல்லால் கைம்மாறிலேன்; என்று அருளினாள்.

நஞ்சீயர்சிஷ்யர்களுள் ஒருவராகிய பெற்றி என்பவர் சேதுயாத்திரைசெய்கிறபொழுது, சிலர் இவரை நோக்கித் ‘தலையல்லால் கைம்மாறிலேன்’ என்பதற்கு உண்மையானபொருளின்னதென்று விளங்கவில்லை; இதன்பொருள் யாது? என்று வினாவினார்கள். அதற்கு இவர் குயிலே! என்னுயிர்த்தலைவன் இங்கு வருமாறு கூவுவையேல், நான் உனக்குக் கைமாறாக என் தலையைத்தருமத்தனையிறே என்று சொல்லுகிறாள்; என்றுரைத்தார். இங்குத் தலைத்தருதல் என்பதற்குத் தலையினால் வணக்கந்தருதல் என்று பொருள் கொள்ளத் தக்கது. பெற்றி, தமது ஆசார்ய ஸந்நிதியில் திருவாய்மொழிக்குப் பொருள் பதினொருமுறை கேட்டவராயிருந்தாலும் நாய்ச்சியார் திருமொழிக்குப் பொருள் முறையாகக் கேட்கப்பெறாததினால் ‘தலையல்லால் கைம்மாறிலேன்’ என்பதற்குத் தாமுரைத்த உரையைக் காட்டிலும் வேறு சிறந்த பொருளிருக்கவேண்டும் என்று தமக்குட்கருதி நம்பிள்ளை ஸந்நிதியிற் கேட்க அவாக்கொண்டிருந்தார். பின் யாத்திரையும் முடிவுபெற்று இவர் ஸ்ரீரங்கத்திற் கெழுந்தருளினபோது நம்பிள்ளையை நோக்கி ஸ்வாமி! அடியேன் ஜீயர் ஸந்நிதியில் நாய்ச்சியார்திருமொழிக்குப் பொருள் கேட்கும் பாக்யத்தைப்பெற்றிலேன்; ‘தலையல்லால் கைம்மாறிலேன்’ என்பதற்கு ஜீயர் அருளிச்செய்யும் பொருள் யாது? என்று கேட்டார். அவர், “குயிலே! நீ பண்ணின உபகாரத்திற்கு * ‘இத்தலையால் செய்வ

* இத்தலையாற் செய்வதொன்றுண்டோ என்றது என்னிடத்திற் செய்யக்கிடப்பதொன்றுண்டோ என்றவாறு. பிரிவாற்றாமையால் நோவுபட்டிருக்கிற எனது நோயகல என்னுயிர்த்தலைவன் வருமாறு கூவுதற்கு ஒப்பான கைம்மாறாகச் செய்யத்தக்க பொருள் என்னிடத்திலொன்றுமில்லையென்பது கருத்து. அங்ஙனம் செய்யத்தக்கதொன்றில்லையேனும் உபகாரஞ்செய்ததை மறக்கலாகாதென்ற முறைபற்றி அதற்கறிகுறியாக ஏதேனும் செய்யத்தக்கதை நோக்கினால் சரீரமுள்ளவரை அடிமை செய்வதன்றிப் பிறிதொன்றுண்டோ? இங்கு அவயவங்களிற் சிறந்ததலையைக்கூறியது அவயவிக்கு உபலக்ஷணமாகக் கொள்க.

தோன்றுண்டோ' என்று என் தலையை உனக்காக்கிக் காலமெல்லாம் உன் காலிலே வணங்கி வர்த்திக்குமத்தனை" என்கிறுள்; என்று ஜீயர் அருளிச்செய்வார் என்றுரைத்தார். இவர் இப்பொருளைக் கேட்டவுடன் அளவின்மிக்க ஆநந்தங்கொண்டு நம்பிள்ளையை நோக்கி "ஸ்வாமி! அடியேன் ஜீயர்ஸந்நிதியில் காலக்ஷேபங்கேட்டு வந்த காலத்தில் ஒருநாள் ஜீயரை நோக்கி அடியேனுக்குப் பன்முறையும் யாத்திரைசெய்யவேண்டிய ஸந்தர்ப்பம் நேருகின்றதினுல் தேவரீர் ஸந்நிதியில் இடைவிடாது அருளிச்செயலின் அர்த்தங்களைக் கேட்க வியலாதவனு யிருக்கின்றேனுதலால், பல வர்த்த விசேஷங்களை நெஞ்சிற் கொள்ளும் பாக்யமற்றவனுய் விடுகிறேன்; இதுநிற்க, அடியேன் யாத்திரையாகச் சென்ற விடங்களில் அடியேன் தேவரீர் திருவடிநிழலில் ஒதுங்கிநின்று பல அர்த்த விசேஷங்களைக்கேட்டிருக்கக்கூடும் என்றுகருதிப் பலர்அடியேனிடத்தில் 'இதற்குப் பொருள் யாது?' இதற்குப் பொருளென்ன? என்று வினவ வருவார்கள். அதுசமயம் தேவரீர் அருளிச்செய்யும் அர்த்த விசேஷமே அடியேனுடைய நெஞ்சிலுதிக்கும்படி அநுக்ரஹிக்க வேண்டும் என்று வேண்டிநின்றேன்; ஜீயரும் அங்ஙனமே ஆகுக என்று அநுக்ரஹித்தார். அவ்வநுக்ரஹம் அடியேன்பாற் பலிக்கக் கண்டிலேன்; அரிய அர்த்தவிசேஷங்களை ஆசார்ய ஸந்நிதியில்அடிப்பட்டே அறிந்துகொள்ளவேண்டுமே யல்லது வரபலத்தாலறிவதெங்ஙனம்? இதனுல் பாவியேனுக்கு ஜீயர்வரம் பலிக்காதொழிந்தது போலும்;" என்றுரைத்தார்.

இதனுலும் ஞானக்கலையை ஆசார்யன் வாயிலாகவே கேட்டு அறிந்துகொள்ளவேண்டு மென்பது அறிவுறுத்தலாயிற்று.

ப. அ.

---

ஸ்ரீ:

# மஹாபாரதத்தாலறியப்படும் நீதிகள்.

குருவம்சத்திற் பிறந்த அபிமன்யுவின் புதல்வராகிய பரீக்ஷித்து மஹாராஜா ஒருநாள் வேட்டையில் விருப்பங்கொண்டு சென்றார். அப்பொழுது இவர் ஒரு மானைக் குறிவைத்துப் பாணத்தாலடிக்க அந்தமான் இவரது கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்தது. இவரும் அதைப் பலவிடங்தேடிக்காணமல் களைப்புற்று தாகத்தினால், வருந்திப் பசுக்களால் ஊட்டப்பட்ட கன்றுவின் வாயிலிருந்து வெளிப்படும் பால் நுரைகளைப் புஜித்து மௌனவிரதத்தை மேற்கொண்டு மாட்டின் தொழுவிலிருந்த ஒரு மஹரிஷியைச் சந்தித்துப் ‘பிராம்மணரே! நான் அபிமன்யுவின் புதல்வனாகிய பரீக்ஷித்து என்னும் பெயரையுடையேன்; என்னால் ஏவுண்ணப்பட்ட மான் இங்கு வந்ததுண்டோ?’ என்று பன்முறையுங்கேட்டார். மஹரிஷி மௌனவிரதத்தை மேற்கொண்டவராதலால் வாளாவிருந்தார். பரீக்ஷித்துக் கோபங்கொண்டு செத்துக்கிடந்த பாம்பை வில்லின்நுனியாலெடுத்து மஹருஷியின் கழுத்திலிட்டார். இதுகண்ட மஹருஷி யாதொருவெறுப்பின்றியுமிருந்தார். இந்நிலைகண்ட பரீக்ஷித்து தமக்குள் துன்புற்றுத்தம் இருக்கையடைந்தனர்.

பின்னர் இந்த மஹரிஷியின் புதல்வராகிய சிருங்கி என்பவர் பிரம்மலோகஞ்சென்று திரும்பி வருகிறபோது தம்முடைய சிநேகிதனாகிய கிருசனென்பவனைச் சந்தித்தார். கிருசன் இவருக்குக் கோபமுண்டாகும்படி இவரைப்பார்த்து ‘சிருங்கியே! சிறந்த தவமுடைய உமதுபிதா சவத்தைச் சுமக்கிறார்; இந்நிலையுடைய உமது பிதாவை பார்க்கப்போகின்ற உமக்கு ஆண்பிள்ளை என்கிற அபிமானம் ஏது? உம்முடைய பிதா தமக்குத் தகாதகார்யத்தைச் செய்துகொண்டார்; அதனால் நான் மிகவும் விசனப்படுகிறேன்’ என்றான்.

இந்தக் கடுஞ்சொல்லைக் கேட்டவுடன் சிருங்கி என்பவர் மனவருத்தமுற்று கிருசனைநோக்கி ‘மாசற்ற நெஞ்சுடையவராய் மௌன

விரதத்தை மேற்கொண்டு எப்பொழுதும் விஷ்ணுரூபியான எம்பெருமானைத் தியானஞ்செய்துகொண்டிருக்கிற என்னுடைய பிதா சவத்தைச் சுமப்பதற்குக்காரணம் என்ன?' என்று கேட்டார். அப்பொழுது கிருசன் பரீக்ஷித்துமஹாராஜா செத்தபாம்பை மஹாரிஷி கழுத்திலிட்டுச் சென்ற விருத்தாந்தத்தைக் கூறினன்.

உடனே சிருங்கி என்பவருக்குக் கோபமுண்டாகிக் 'கிருசனே! கெட்ட ஒழுக்கமுடைய அந்த அரசனுக்கு என் பிதா என்ன தீங்கு செய்தார்? உண்மையாகச் சொல்வாய்' என்றார். கிருசன் நிகழ்ந்ததை அறிவித்தான். சிருங்கி, தவவொழுக்கத்தை மேற்கொண்டு பரமசாந்தநிஷ்டராயிருக்கிற என் பிதாவை அவமதித்த அந்தப் பரீக்ஷித்துராஜன் இன்னும் ஏழு தினத்திற்குள் தக்ஷகன் என்ற பாம்பினல் தீண்டப்பெற்று உயிர்துறக்கக்கடவன்; என்று சபித்து, கழுத்திற்கிடக்கும் செத்த பாம்பையுமெடுத்தெறியாமல் தவத்தில் நோக்குடையவராய் மாட்டுத்தொழுவிலிருக்கும்' தமது பிதாவை அடைந்து நிகழ்ந்ததைத் தெரிவித்தார்.

அப்பொழுது இவர்பிதாவாகிய சமீகர், 'குழந்தாய்! அந்தோ! நீ என்ன காரியத்தைச் செய்தனை; தர்மம் செய்கின்றவர்கட்கு இது தர்மமன்றே; நாம் அந்த ராஜாவின் தேசத்தில் வஸிக்கிறோம்; அவனல் காக்கப்படுகிறோம்; ராஜா எவ்வாறு நடந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுதற்கு நமக்குக் கடமையுண்டன்றே; அரசனுடைய செங்கோன்மை நடைபெறுதொழியுமேல் உலகந் தன்புறமல்லவா; மேலும் அவ்வரசன் நான் மௌனவிரதத்தை மேற்கொண்டிருப்பதை அறியாது பிழைசெய்தானேயன்றி வேறன்றே' என்று பலவாறாக நற்புத்திகூறி அரசன் விஷயத்தில் அருள்கொண்டு நிகழ்ந்ததை அவ்வரசனுக் கறிவிக்கும்படி தம் சிஷ்யருளொருவராகிய கௌரமுகரை ஏவினர்.

அவர் அரசன்பாற்சென்று அறிவித்தார். அதுசமயம் பரீக்ஷித்துத் தம்முயிரைப்பற்றிய கவலையைக் காட்டிலும் ஆராயாது மஹாரிஷியின் விஷயத்திற் செய்த பெரும்பிழைக்குக் கழிவிரக்கங்கொண்டு வருந்திக் கௌரமுகரை நோக்கி 'இனிமேலும் உமது

ஆசார்யராகிய சமீரகர் யான்செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண் டும்' என்று வேண்டியதாக அறிவிப்பீராக; என்று அவருக்கு விடையளித்தார்.

அதன்பின் பரீக்ஷித்து மந்திரிகளுடன் ஆலோசித்து ஒற்றைத் தூண் நாட்டப்பெற்ற மிகவும் பாதுகாவலுடைய ஒரு மாளிகை கட்டுவித்து அதைச்சுற்றிலும் வைத்தியர்களும், ஔஷதங்களும், மந்த்ரஸித்தியுள்ள பிராம்மணர்களும் நிறைந்திருக்கும்படி கட்டளை யிட்டு அதிலிருந்து ராஜ்பகார்யங்களை நடத்திவந்தார். அவ்விடம் காற்றும் அணுகுதற்கியலாத காவலுடையதாயிருந்தது. ஏழாவது நாள் வந்தபோது வித்வானாகிய காசியபர் என்ற பிராம்மணசிரேஷ் டர் அரசனது ஆபத்தை விலக்குதற்கு வருகிற வழியில் தக்ஷகன் ஒரு கிழப்பிராம்மண வடிவங்கொண்டு அவரைச் சந்தித்து 'நீர் யார்? எங்குச் செல்கின்றீர்?' என்று கேட்டான். காசியபர் இன்று தர்மஜ்ஞனாகிய பரீக்ஷித்து மஹாராஜாவைத் தக்ஷகன் தன்விஷபலத் தால் எரித்து விடப்போகிறான்; அவ்விஷத்தை என் மந்த்ரபலத்தால் போக்குவதற்காகச் செல்லுகிறேன்' என்றார். இதுகேட்ட தக்ஷ கன், 'பிராம்மணரே! தக்ஷகன் என்பவன் யானே; என்னால் கடிக்கப் பட்டவன் உம்மால் உயிர்ப்பிக்கப்பெறான்; ஏன்? வீண் முயர்ச்சி செய்கிறீர்; திரும்பிச்செல்வீர்' என்றான். காசியபர், 'என் மந்திரத் தின் வலிமை நீ யறியமாட்டாய்' என்றார். தக்ஷகன் அங்ஙனமா யின் இந்த ஆலமரத்தை என் விஷத்தால் எரித்துவிடுகிறேன் அதை நீர் உயிர்ப்பியுமென்று மரத்தைத் தீண்டினான். உடனே ஆலமர மெரிந்து சாம்பலாயொழிந்தது. அப்பொழுது காசியபர் தம் மந்த்ர பலத்தால் அம்மரம் முன்புபோலத் தளிர்த்து நிற்கும்படி செய்தார்.

இதுகண்ட தக்ஷகன் ஆச்சர்யங்கொண்டு காசியபரை நோக்கிப் 'பரீக்ஷித்து பெரியோரது சாபத்திற்குள்ளாகி விட்டான். அவரு டைய சாபம் வீணாகமாட்டாது. ஆதலால் நீர் இனி, இதுவிஷயத் தில் முயற்சி செய்யாதிருப்பீராக' என்று இன்னுரை கூறி அவர் விரும்பிய பொருளைக்கொடுத்து அனுப்பினான். அதன்பின் தக்ஷகன் பல நாகர்களை ரிஷிவேஷத்துடன் பழவர்க்கங்களையும், ஜலத்தையுங்

கொண்டுபோகும்படி அரசனிடம் அனுப்ப அவர்களும் அவ்வாறே செய்தனர். பின்பு பரீக்ஷித்து ரிஷிகள் கொணர்ந்த பழவர்க்கங்களை மந்திரிகளுடனிருந்து புஜிக்கக்கருதி விதிவசத்தால் தக்ஷகன் ஆவேசித்திருந்த பழத்தை எடுத்துப் புஜிக்கத்தொடங்கினர். அதினின்றும் ஒரு சிறிய புழு வெளிப்பட்டது. பரீக்ஷித்து அந்தப்புழுவை எடுத்து மந்திரிகளை நோக்கி ஸூர்யன் அஸ்தமனமாகப்போகிறான்; இனி விஷத்தின் பயமில்லை; அந்த ரிஷியின் வாக்கும் பொய்யாகாதொழிய; இந்தப்புழு தக்ஷகன் என்னும் பெயருள்ளதாகவிருந்து என்னைத்தீண்டுக' என்று அதைக் கழுத்தில் வைத்துச் சிரித்தார். உடனே தக்ஷகன் அரசனுடைய சரீரத்தைச் சுற்றிக்கொண்டு பேரிரைச்சலிட்டுத் தீண்டிக்கொன்றான். மந்திரிமார்கள் 'விதியை வெல்ல யாரால் முடியும்' என்று மனவருத்தமுடையவராய் அரசனுக்குச் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்துமுடித்தார்கள்.

இனி இதுவரையுங் கூறியதினாலறியப்படும் நீதிகளுரைக்கப்படும். அவை:—பரீக்ஷித்து ஆராயாதுசெய்த செய்கையால் வெறுக்கத்தக்க காரியங்களைப் பெரியோர் விஷயத்திற் செய்யலாகாதென்பதும், செய்தால் பெரியாரது சாபத்திற்கிலக்காகிக் கேடடைவர் என்பதும், சிருங்கியைநோக்கி கிருசன்உரைத்தவற்றால் கோபத்தையுண்டுபண்ணுகின்ற உரையைக்கூறுவதும் கெடுதியை விளைக்குமென்பதும், சமீககர் தம் புதல்வனைநோக்கி யுரைத்த உபதேசத்தால் கோபத்தை ஒழித்துப் பொறுமையைக் கைக்கொள்ளவேண்டுமென்பதும், அறியாதுசெய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்பதும், பரீக்ஷித்துக் கௌரமுகனை நோக்கியுரைத்ததினால் பெரியார் விஷயத்தில் அறியாதுசெய்த பிழையைக்குறித்துக் கழிவிரக்கங் கொள்ளவேண்டுமென்பதும், காசியபர் விஷத்தால் சாம்பலான மரத்தைத் தளிர்க்கும்படி செய்ததினால் மந்த்ரசக்தியால் செய்யக்கூடாதது ஒன்றுமில்லை என்பதும், பரீக்ஷித்து உயிரைப் போற்றப் பல உபாயம் செய்தும் பலிக்கவில்லையாதலால் விதியே வலியுடைத்தென்பதும் வெளியாயின.

ஸ்ரீ:

# பன்மணித்திரள்.

## வைஷ்ணவத்வம்.

கழிந்தநாளைக்கு அநுதபிக்கையும், வருகிறகாலத்தைப் பழுது போக்காமையுங்காண் வைஷ்ணவத்வமாவது என்று நம்பிள்ளை அருளிச்செய்தார். இந்த வாக்யம், வைஷ்ணவனாயிருப்பான் தன் வாழ்நாளை இவ்வாறு கழிக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கூறுகிறது. ஒருவனுக்குப் பகவதநுக்ரஹத்தினாலாவது ஆசார்யோபதேசத்தாலாவது இதர விஷயப் பற்றற்று, பகவதநுபவமுண்டானபோது முன்னர் மானேய்கண்மடவார் மாயவலையிற்பட்டு மதிமருண்டு திரிந்தகாலமெல்லாம் வீணே கழிந்தனவென்று அவனுக்கு அநுதாபமுண்டாகும். இவ்வாறு பூர்வநிலையின் உண்மை தோன்றுகின்ற இதுவே ஜ்ஞாநநிலையென்று வழங்கப்பெறும்.

ஆழ்வாருக்கு எம்பெருமான் மயர்வற மதிநலமருளிய பின்னர் அவரது ஜ்ஞாநக் கண்ணிற்கு முன்னர்த் தாம் நின்ற நிலையெல்லாம் ப்ரத்யக்ஷமாகத் தோன்றியதனால் அவர், "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை யினியாமுறாமை......" என்று பூர்வநிலையைச் சிந்தித்தார். திருமங்கை மன்னனும்,

"வாடினேன்வாடிவருந்தினேன்மனத்தால்பெருந்துயரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடிஇளையவர்தம்மோடவர்தருங்கலவியேகருதி
ஓடினேன்..............".

என்று அருளிச்செய்தார். இன்னும் இது விஷயத்தை விளக்கமாகப் பொய்கையாரும்,

"பழுதேபலபகலும்போயினவென்றஞ்சி
யழுதேனரவணைமேற்கண்டு—தொழுதேன்
கடலோதம்காலலைப்பக்கண்வளரும்செங்கண்
அடலோதவண்ணரடி".

என்று அருளிச்செய்தார். இங்குப் பழுதே பலபகலும் கழிந்தமைக்கு அழுதேனென்பதோடமையாது அஞ்சியழுதேன் என்றதற்குக் காரணம்யாதெனில்; பழுதேகழிந்த நாளிற் கெல்லையில்லை; இனிக் கழியும்நாளும் அங்ஙனமாகிற் செய்வதென்? என்று அஞ்சியழுதேன் என்றார். ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும் பொருட்டு ரதத்தின் மீதேறி ராஜவீதியின் வழியாகச் செல்லுகிற சமயத்தில் எல்லோரும் அவர் வடிவழகில் ஈடுபட்டுப் பரமானந்த முற்று இன்று விடிவோரையே நமக்கு நல்லதினமாயிற்று; இனி, ராமபிரான் ராஜ்யாபிஷேகம்பெற்றுத் திரும்பிவரும் அழகைக் கண்டு களிப்பதே நமக்கு வாழ்வாகும்; நமக்கென்று இனி உணவு வேண்டுவதுமில்லை; என்று பலவாறாகக் கூறிப் பின்,

"𑌯𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌯𑌂 𑌚 𑌰𑌾𑌮𑍋 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿।
𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌸𑍍𑌸 𑌵𑌸𑍇𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌨𑌂 𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌤𑍇"॥

"யச்ச ராமம் நபச்யேத்து யஞ்ச ராமோ நபச்யதி
நிந்திதஸ்ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே"

எவன் ராமபிரானைத் தரிசியாதிருப்பானோ எவனை ராமபிரான் கடாக்ஷிக்காதிருப்பாரோ அவன் உலகத்தில் எல்லாராலும் நிந்திக்கப்பட்டு வஸிப்பான்; அவனைத் தனதாத்மாவும் நிந்திக்கும்; என்றுரைத்தார்கள். ஒருநாள் ராமபிரான் முகத்தில் விழியாதிருப்பார் இத்தனைபாடுபட்டால் எல்லைபற்றநாள் பழுதாய்க் கழிந்தமைக்கு அஞ்சியழாதிருப்பதெங்ஙனம்? இடரான யாக்கைவிட்டகன்று பரமபதஞ்சென்று எம்பெருமானைக் கண்டநுபவிக்கும் ப்ராப்யதசையிலன்றோ கழிந்த நாளிற்கு அநுதபிக்காதிருக்கும் நிலைமை கைகூடும்.

இனி, வருகிறகாலத்தைப் பழுதுபோக்காமை என்பது நிரூபிக்கப்படும்.

உலகத்தின் இயல்பைநோக்கினால் அது, "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைம்புலன்..." என்றபடி நித்யஸூரிகளுள் ஒருவரான பெரியதிருவடியையும் எம்பெருமானோடெதிர்த்துக் குறைகூறும்படி செய்யும் இயல்பினையுடையதாயிருக்

கின்றது. இந்த ஞாலத்தில் வஸிக்கும் பஞ்சபூதத்தாலாய சரீரத்தை யுடைய நமதியல்பை நோக்கினாலும் "ஐவர் திசை திசை வலித்தெற்று கின்றனர்" என்றும் "ஒன்று சொல்லி ஒருத்தனில் நிற்கிலாத வோரைவர் வன்கயவரை, என்றியான் வெல்கிற்பன்..." என்றும், "குலமுதலடும் தீவினைக் கொடுவன்குழியினில் வீழ்க்கு மைவர்" என்றும் ஆழ்வாரருளிச்செய்தபடி இந்திரியங்களின் வாயிலகப் பட்டு அலமந்து திரியுமவர்களாயிருக்கிறோம். இந்நிலையில் நமக்கு ஜ்ஞானம் பிறந்தாலும், இந்த ஜ்ஞானம் நிலைபெற்றிருத்தற்குப் பூர்வ வாஸனை தடையாய் நின்று அது, நம்மை இதர விஷயங்களிற் கொண்டு மூட்டும். இவ்வாறுமூட்டுகின்ற பூர்வவாசனையின் வழிச் சென்று காலத்தைப் பழுதாக்காமல் பகவத்விஷயத்திற் காலத்தைக் கழிக்கவேண்டும். இதுபற்றியே லோகதேசிகனும் "இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களில் ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர் யங்களிலே பொழுதுபோக்காகையும்" என்று அருளிச்செய்தார். இவர் அருளிச்செய்தபடி நம்வாழ்நாளைப் பகவத்குணாநுபவத்தி லும், அவன் விஷயகைங்கர்யத்திலும் கழித்துக்கொண்டு வருகிற அப்யாஸத்தினால் இதர விஷயத்தில் மனம் செல்லாது ஒரு வழிப் பட்டு நிற்கும். நிற்கவே,

> "கண்ணாநான்முகனைப்படைத்தானேகாரணாகரியாயடியேன்நான்
> உண்ணாநாள்பசியாவதொன்றில்லையோவாதேநமோநாரணாவென்று
> எண்ணாநாளும்இருக்கெசுச்சாமவேதநாண்மலர்கொண்டுன்பாதம்
> நண்ணாநாளவைதத்துறுமாகில்னறெனக்கவைபட்டினிநாளே"

என்று பெரியாழ்வார், சரீரத்துக்குத் தாரகமாயிருக்கின்ற அந்நபா னாதிகளில் தம் திருஷ்டியை வைக்காமல் பகவத் குணாநுபவம் ஒழிந்த நாளே தமக்குப் பட்டினி நாளாக அருளிச்செய்தபடி நமக்கும் அந்நிலைமையுண்டாகும். அதனால் பகவதநுக்ரஹமாகிய பேறு ஸித்திக்கும்.

இதனால், பகவத்விஷயத்தில் மண்டி, வீணேகழிந்த நாளிற்கு அநுதபித்து, இனிக்கழிக்கும் நாளையும் பகவத் விஷயத்திற் செலுத்துகின்றவனே வைஷ்ணவனாவானென்று வலியுறுத்த லாயிற்று.

## ஆசார்யாபிமானம்.

"எல்லா வேதங்களையும் எல்லா சாஸ்த்ரங்களையும் எல்லா ஆழ்வார் ப்ரபந்தங்களையும் எல்லாவாசார்யர்கள் பாசுரங்களையும் பார்த்தவிடத்து, ஒருவைஷ்ணவனுக்கு நிலைநின்ற ஆசார்யாபிமானமொழிய மோக்ஷோபாயமில்லை; நிலைநின்ற பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதியுமில்லை". என்று நம்பூர்வாசார்யர்கள் அருளிச்செய்தனர். இவ்வாக்யத்தால் ஒருவனுக்கு ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்று வலியுறுத்தப்படுகிறது. வேத முதலிய ப்ரமாணங்களும், அவற்றை நன்கறிந்த சிஷ்டர்களின் வாய்மொழிகளும், அங்ஙனமே உரைக்கின்றன. அவை வருமாறு:—

"ஆசார்யனையுடைய புருஷன் அறிகிறான்" என்று வேதமுரைத்தது.

𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵𑌪𑌰𑌾𑌗𑌤𑌿𑌃 ।
𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 ॥
𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵𑌪𑌰𑌂𑌧𑌨𑌂 ।
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌦𑍁𑌪 𑌦𑍇𑌷𑍍𑌟𑌾𑌸𑍌 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌗𑍁𑌰𑍁𑌤𑌰𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃 ॥

குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவ பராகதி
குருரேவ பராவித்யா குருரேவ பராயணம்.
குருரேவ பராகாஷ்டா குருரேவபரம்தநம்
யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌதஸ்மாத் குருதரோகுரு:

என்று சாஸ்த்ரமும் ஆசார்யனே எல்லாமாவானென்று கூறியது. ஆழ்வாரும் "அஞ்சிறைபமடநாராய்" என்ற திருவாய்மொழியில் ஆசார்யனே கடகனாவான் (சேர்ப்பிப்பானாவான்) என்று அருளிச்செய்தார்.

ஞானமனுட்டானமிவைநன்றாகவேயுடைய
னானகுருவையடைந்தக்கால்—மாநிலத்தீர்
தேனார்கமலத்திருமாமகள்கொழுநன்
தானேவைகுந்தந்தரும்.

என்றும்,

உய்யவினையுண்டாகிலுங்குருக்கள்தம்பதத்தே
வையுமன்புதன்னையிந்தமாநிலத்தீர்—மெய்யுரைக்கேன்
பையரவில்மாயன்பரமபதமுங்களுக்காம்
கையிலங்குநெல்லிக்கனி.

என்றும் அருளிய ஆசார்யருரையாலும் ஆசார்யன் விஷயத்தில் வைக்கும்அன்பே பேற்றுக்குக்காரணமாம்என்று சொல்லப்பட்டது. ஆக எல்லாப்ரமாணங்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஆசார்யனே பரமப்ராப்பனுவானென்பதறிபலாம். இது நிற்க; மதுரகவியாழ்வார், "தேவுமற்றறியேன்குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று நம்மாழ்வாரையே பரதேவதையாகக் கொண்டொழுகினர். இன்னும் வடுகநம்பி, விளாஞ்சோலைப்பிள்ளை முதலானோர்களும் ஆசார்யநிஷ்டையுடையவர்களாய் விளங்கினர்கள். மேலும், விளாஞ்சோலைப்பிள்ளை,

தீங்கேதுமில்லாத்தேசிகன்றன்சிந்தைக்குப்
பாங்காகநேரேபரிவுடையோர்—ஓங்காரத்
தேரின்மேலேறிச்செழுங்கதிரோனூடுபோய்ச்
சேருவரேயந்தாமந்தான்.

என்று ஆசார்யநிஷ்டையுடையோர்க்குப் பலம் பரமபதப்ராப்தி என்று தெளிவாக அருளிச்செய்தார். இதனால் ஆசார்யாபிமானமே மோக்ஷோபாயமாமென்பது அறிவுறுத்தலாயிற்று. இனி, 'நிலைநின்ற பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதியுமில்லை' என்பதைக் கீழ்க் குறிப்பிடுகின்ற விஷயத்துடன்சேர்த்து விவரிக்கப்படும்.

---

## பாகவதாபசாரம்.

"ஆசார்யன் விஷயத்தில் அபசாரம்பண்ணின நாலூரானும் ஈடேறினான்; பகவத் விஷயத்தில் அபராதம் பண்ணின சிசுபாலனும் ஈடேறினான்; பாகவதவிஷயத்தி லபசாரம் பண்ணினார் இன்னார் ஈடேறினாரென்று இதற்குமுன்பும் கேட்டறிவதில்லை, என்று கூரத்தாழ்வான் திருத்தேவியாராகிய ஆண்டாள் அருளிச்செய்தாள்.

இவ்வாக்யம் எவ்வகையானும் பாகவதாபசாரப்படலாகா தென்றுவலியுறுத்துகிறது. இதுநிற்க, கூரத்தாழ்வானுடைய சிஷ்ய னை நாலூரானுடைய தூண்டுதலால் கிருமிகண்டசோழன் கொடுங் கோன்மை செய்ய அதனால் கூரத்தாழ்வான் கண்ணிழக்கும்படி நேர்ந்தது. இதனால் நாலூரான் ஆசார்யன் விஷயத்தில் தீரக்கழிய அபசாரஞ் செய்தவனானான். பின் நம்பெருமாள் திருவுள்ள முகந்து கூரத்தாழ்வானை நோக்கி 'உமக்கு நாம் மேல்வீடு தந்தோம்' என்று அருளியகாலத்தில் கூரத்தாழ்வான் 'நான் பெற்றபேறு நாலூ ரானும் பெறவேண்டும்' என்று அருளினர். இதனால் நாலூரானுக் குப் பேறு வித்தித்தது.

தர்மபுத்ரர் ராஜஸூயயாகம் செய்த காலத்தில் அவர் கண்ண பிரானுக்கு அக்ரபூஜைசெய்த காரணத்தால் சிசுபாலன் மனம் பொறுது கண்ணபிரானை நோக்கி அடாப்பழியான தூஷணமொழிக ளைப் புகன்றான். அப்பொழுது கண்ணபிரான் 'இவனை இனி உலகில் வைக்கலாகாது' என்று சக்கராயுதத்தால் அவனுடைய சிரசைச் சேதித்தபோது அவனது சரீரத்தினின்று ஒரு ஜோதி தோன்றிக் கண்ணபிரானுடைய திருவடியை யடைந்தது. இதனை,

கேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லால்மற்றுங்கேட்பரோ
கேட்பார்செவிசுடுகீழ்மைவசவுகளேவையும்
சேட்பால் பழம்பகைவன்சிசுபாலன்திருவடி
தாட்பாலடைந்ததன்மையறிவாரையறிந்துமே.

என்று ஆழ்வார் அருளியதாலும் அறியலாம்.

ஆக, இந்த இரண்டு வரலாற்றாலும் ஆசார்யாபசாரமும், பகவ தாபசாரமும் செய்தார் ஈடேறினார்களென்பதற்குப் பிரஸித்தி காணப்பட்டது. பாகவதாபசாரம் செய்தார் ஈடேறினரென்பது யாண்டுமில்லை யாதலால் இங்குப் 'பாகவத விஷயத்தில் அபசாரம் பண்ணினர் இன்னர் ஈடேறினரென்று இதற்கு முன்பும் கேட்டறிவ தில்லை' என்று சொல்லப்பட்டது. ஆகவே அபசாரங்களெல்லாவற் றுள்ளும் பாகவதாபசாரம் மிகவும் குரூரமானதென்று அறியத்தக் கது. இதுநிற்க;

ஸ்ரீராமபிரான் பிராட்டியாருக்குக் காவலாக இளையபெரு மாளை வைத்துவிட்டுத் தாம் மாயாமிருகத்தின்பின் சென்றகாலத்தில்

மாயாமிருகம் ராமபாணத்திற்காற்ருது உயிர்விடுகின்றபோது லக்ஷ்மணு! என்று கூக்குரலிட்டு மாண்டது. அதைக்கேட்ட பிராட்டியார் திடுக்கிட்டுத் திருவுள்ளம் நொந்து,

குற்றம்வீய்ந்தகுணத்தினெங்கோமகன்
மற்றைவாளரக்கன்புரிமாயையால்
இற்றுவீழ்ந்தனனென்னவுமென்னயல்
நிற்றியோவிளையோயொருநீயென்ருள்.

இளையபெருமாளை நோக்கி 'மாசற்ற குணவிசேஷத்தையுடைய தலைவன் அரக்கன் செய்த மாயையால் உயிர்நீத்ததறிந்து வைத்தும் என்னை விட்டகலாது நிற்கின்றனையே; நீ ஒரு வீரனே!' என்று கூறினள். அப்பொழுது இளையபெருமாள்,

பாரெனக்கனலெனப்புனலெனப்பகாப்
பேரெனத்திசையெனமுனியிற்பெருமால்
காரெனக்கரியவக்கமலக்கண்ணனை
யாரெனக்கருதியிவ்விடரினுழ்கின்றீர்.

தாயே! ராமபிரானை எவரென மதித்துத் துன்புறுகின்றீர்; அவர் கோபத்திற்கு எவ்வகையுலகமும் ஆற்ருதென்ப தறியீரோ?

பரக்கவென்பகர்வதுபகழிபண்ணவன்
துரக்கவங்கதுபடத்தொலைந்துசோர்கின்ற
அரக்கனவ்வுரையெடுத்தரற்றினனதற்
கிரக்கமுற்றிரங்கலிரிருத்திரீண்டென்ருன்.

மேலும் ராமபிரானுடைய ஆற்றலைப் பரக்கச்சொல்லவேண்டுவ தொன்றுண்டோ? நீர் கருதியபடி அவருக்கு யாதொரு ஆபத்தும் நேரவில்லை; மாயமாகு வந்த அரக்கனே கூக்குரலிட்டரற்றினனே யொழியப் பிறிதில்லை; இதற்கு நீர் அஞ்சாதிருப்பீராக வென்று தேறுதல் கூறினர். இவ்வுரை கேட்டும் பிராட்டியார் காதினல் கேட்கவெண்ணுத கடுஞ்சொல்லைப் புகன்று,

ஒருபகல்பழகினுருயிரையீவால்
பெருமகனுலையுறுபெற்றிகேட்டுநீ
வெருவலைநின்றனைவேறெனயானினி
எரியிடைவீழ்ந்துயிரிறப்பலீண்டெனு.

யான் தீயிற் புகுந்து உயிர் துறப்பேனென்ருள். அதன்பின் இளைய பெருமாள் பிராட்டியை விட்டகல அதனல் பிராட்டியார் இராவண

னுடைய அசோகவனத்திற் பத்துமாதம் சிறையிருக்கும்படி நேர்ந்த இதுவும் பாகவதாபசாரத்தினுடைய பலனாகும். லோகமாதாவாகிய பிராட்டியாரும் பாகவதாபசாரத்தால் இத்தனை பாடுபட்டால் ஏனையோர்கட்குச் சொல்லவேண்டுமோ!

மேலும், நம்பிள்ளை நஞ்சீயரை நோக்கிப் பகவதவதாரம் எதற்காக என்று கேட்டார். ஜீயர் "ஈசுவர னவதரித்துப்பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை" என்று அருளிச்செய்தார். தன்னுடைய ஸங்கல்பத்தால் எல்லாவற்றையுமாக்கவல்ல ஸர்வேசுவரன் ஹிரண்யாதிகள் ப்ரஹ்லாதன் முதலான பாகவதவிஷயத்திற்செய்த அபசாரத்தைப் பொறுக்காமல் தன்னையழிபமாறி வந்தவதரித்தானென்றால் பாகவதாபசாரத்தின் குரூரம் தெளிவாக விளங்குகிறதல்லவா! "ஜ்ஞாநாநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப்போலே இழவுக்கு அவர்கள் பக்கல் அபசாரமே போரும்" என்று லோகதேசிகன் அருளியதும், இங்கு அறியத்தக்கது.

இதனால், நிலைநின்ற பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதியுமில்லை என்பதும் புலனாயிற்று.

ப. அ.

---

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

---

(91ம் பக்கத் தொடர்ச்சி)

'கைவல்யம் லீலாவிபூதியிலுள்ளது என்னும்' பிரதிபக்ஷ வ்யவஹாரங்களிருக்கும்படி சொல்லப்பட்டது கீழ். இனி அவைகளுக்குப் பரிஹாரங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

அந்தந்த ஸம்பிரதாயஸ்தர்களுடைய பூர்வாசார்யர்களாலே நிர்ணீதமான அர்த்தவிசேஷத்திற்கு அநுபபத்தி யேற்பட்டால் அது அவச்யம் பரிஹரணீயமாகையால் பரிஹாரநிரூபணம் ஆவச்யகம்.

கேவலனுக்கு, கீதாபாஷ்யத்தில் ஆத்மப்ராப்தியும் ஸ்ரீபாஷ்யத்தில் ப்ருஹ்மப்ராப்தியும் சொல்லியிருப்பதால் இரண்டு பலங்களுக்கும் பௌகபத்யம் கூடாமையால் பௌர்வாபர்யேண நிர்வாஹம் பண்ணவேண்டியதென்பது அநுபபந்நம்; ஏனென்றால்? அநேக ப்ரமாணங்களால் ஆத்மப்ராப்தியே பலமென்றும் அது அவாந்தர பலமில்லை என்றும் அது முக்கிய பல மென்றும் சொல்லியிருப்ப தால் அந்த ப்ரமாணங்களையெல்லாம் இந்த அந்யதாநுபபத்தியைக் கொண்டு பாதிப்பது கூடாது.

பூர்வமீமாம்ஸையில் ஶ்ருதிலிங்கவாக்ய ப்ரகரண ஸ்தாநஸமா [illegible] களில் ஶ்ருதி ப்ரபலப்ரமாணமாகவும் அதைக்காட்டிலும் லிங்கம் துர்ப்பலமாகவும் சொல்லப்பட்டிருக்கையாலே இந்த அந்யதா நுபபத்திரூப லிங்கத்தாலே இந்த ஶ்ருதி ரூபங்களான ப்ரமா ணங்களை பாதி(வாயி)க்க முடியாது. ([illegible]) சப் தைகஸமதிகம்யமான அர்த்தவிசேஷத்தில் சப்தமே அர்த்தநிர்ணாயக மாகையால் அதில் கேவல யுக்திக்கு அவகாசமில்லை. அந்த யுக்தி ப்ரமாணாநுஸாரமாயிருந்தால் க்ராஹ்யமாகும். விருத்தமா யிருந்தால் அநாதரணீயம்.

இந்தவிஷயம் '[illegible]' 'ஆர்ஷதர்மோப தேசஞ்ச' என்கிற மனுஸ்ம்ருதி வசநஸித்தம்.

ஆனால் '[illegible]' ஸர்வேச்யவநதர்மாண:' என்கிற ப்ரமாணத்துக்கு அநுகுணமான யுக்தியாகையால் இதுவும் க்ராஹ்யமாகலாமென்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், அந்த வசனமானது அநேகாந்யதாஸித்திகளோடும் அநேகாசங்கை களோடும் கூடினதாகையால் அநந்யதா (யா) ஸித்த (ஸ்ரீ) ங்களாயும் ஸ்பஷ்டார்த்த ப்ரதிபாதகங்களாயும் இருக்கிற அநேக ப்ரமாணங்க ளுக்கு முன்னிற்கமாட்டாதாகையால் அதைக்கொண்டு அர்த்த நிர் ணயம் பண்ணுவது அநுசிதம். அந்த அந்யதாஸித்தி முதலானவை கள் மேல் நிரூபிக்கப்படும்.

மேலும் ஆசார்யாளுடைய ஸூக்திகளில் இந்த கேவலனுக்கு ஆத்மாநுபவம் அவாந்தரபலமாகச் சொல்லப்படவில்லை; ப்ரத்யுத

விரோதமே ஏற்படுகிறது. அது மேலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது; மேலும் நிரூபிக்கப்படும். ஆனால், ஆத்மப்ராப்தியும் ப்ரஹ்மப்ராப்தியும் பலமாகச் சொல்லியிருப்பதால் அது கூடும்படி யெங்ஙனே யென்னில்? ஸ்ரீபாஷ்யத்தில் கார்யாதிகரணத்தில் 'பஞ்சாக்நிவித்யாயாமபி அர்ச்சிராதிகதிச்ரவணாத் அர்ச்சிராதிநா கதஸ்ய ப்ரஹ்மப்ராப்த்யபுநராவ்ருத்திச்ரவணாச்ச அதஏவ தத்க்ரதுந்யாயாத் ப்ரக்ருதிவிநிர்முக்த ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுஸந்தாநம் ஸித்தம்' 'பஞ்சாக்நிவித்யாயாமபி அர்ச்சிராதிகதி ச்ரவணாத் அர்ச்சிராதிநாகதஸ்ய ப்ரஹ்மப்ராப்தி அபுநராவ்ருத்தி ச்ரவணாச்ச அதஏவ தத்க்ருதுந்யாயாத், ப்ரக்ருதி விநிர்முக்தி ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுஸந்தாநம் ஸித்தம், என்றிருப்பதால் தத்க்ருதுந்யாயத்தாலே ப்ரஹ்மப்ராப்திக்கு அநுகுணமாக ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுஸந்தானம் ஏற்படுகிறதென்று சொல்லியிருப்பதால், அந்த ஸ்வாத்மாநுஸந்தானத்தில் ப்ரஹ்மஸ்வரூபம் விசேஷணமாகத் தோன்றுகிறபடியால் பலத்திலும் விசேஷணதயா ப்ரஹ்மத்தினுடைய ப்ராப்தியே பலமென்று கொள்ளவேணும்.

விசேஷணதயா ப்ரஹ்மத்தினுடைய ப்ராப்தியாவது ஆத்மாநுபவத்தில் ஆத்மாவே ப்ரதாநபோக்யனாயும் ப்ரஹ்மஸ்வரூபம் அப்ரதாநபோக்யமாயும் ஏற்படுகிற அநுபவம். தத்க்ருதுந்யாயத்தில் அபோகவ்யவச்சேதம் ஏற்பட்டபோதிலும் (அதாவது உபாஸநத்திற்கு அவிஷயங்களானகுணங்களும் அநுபாவ்யங்களாகலாமென்று சொன்னபோதிலும்) உபாஸிதகுணங்களுக்கு விருத்தங்களான குணங்களை அநநுபாவ்யங்களென்று அங்கீகரிக்கவேண்டுகையால் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸநத்தில் ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு அப்ரதாநபோக்யத்வமே விஷயமாகையால் அநுபவத்திலும் அப்ரதாநபோக்யத்வமே விஷயமாகவேணும். ப்ரதாநபோக்யத்வம் விருத்தமாகையாலே அநுபாவ்யமாகாது. தஹரவித்யையில் 'தத்விஜிஜ்ஞாஸிதவ்யம்' 'தஸ்மிந்ய தந்தஸ் ததுபாஸிதவ்யம்' என்று குணங்களுக்கு ப்ராதாந்யேந உபாஸ்யத்வம் ஏற்படுகிறதை யநுஸரித்து அநுபவதசையில் 'வ்ரஜந்த்யேதாம்ச்ச ஸத்யாந் காமாந்' 'வ்ரஜந்தி ஏதாந்:ச ஸத்யாந் காமாந், என்று குணங்களுக்கு ப்ராதாந்யம் சொல்லியிருப்பதுபோல் இங்குங் கொள்ளவேணும்.

விசேஷண விசேஷ்யபாவத்தால் ப்ராதாந்யாப்ராதாந்யங்கள் விவக்ஷிதங்கள் அன்று என்று சொல்லில்; சுரு(ஶ்ரு)தியில் சாந்தோக்யத்திலும் ப்ருஹதாரண்யகத்திலும், பிந்நாதிகாரியாகச்சொல்லு மது அஸங்கதமாம். மதுவித்யாங்யாயத்தாலே அவாந்தரபலகல்ப்பநமும் அநுபபந்நம். மதுவித்யையில், வஸ்வாதி பதப்ராப்தியும் அநந்தரம் ப்ரஹ்மப்ராப்தியும் கண்டோக்தமாகையாலே பலத்வய மேற்படலாம். மேலும் மதுவித்யாநிஷ்டனுக்கு அர்ச்சிராதிகதியும் மூர்த்தந்யநாடிநிஷ்க்ரமணமும் இல்லாமையால் இவ்விடத்தில் அவாந்தரபலம் ஆத்மாநுபவமாகவும், ஸாக்ஷாத்பலம் பகவதநுபவமாகவும் சொல்லப்படாமையாலும் மேலும் விருத்தமான வசனமாயிருப்பதாலும் மதுவித்யையை த்ருஷ்டாந்தீகரித்து பலத்வய கல்ப்பநம் பண்ணுவது அநுசிதம்.

மேலும், 'தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விஶிஷ்யதே' தேஷாம் ஞாநீ நித்ய யுக்த: ஏகபக்திர் விஶிஷ்யதே' என்கிறசுலோகவ்யாக்கியானமான கீதாபாஷ்யத்தில், 'உதாரயோஸ்து யாவத்ஸ்வாபிலஷிதப்ராப்தி பயாயோக:' இதரயோஸ்து யாவத் ஸ்வாபிலஷிதப்ராப்தி மயாயோக: என்று ஐசுவர்யார்த்திக்கும் கைவல்யார்த்திக்கும் தங்களுடையபலங்களான ஐசுவர்யகைவல்யங்கள் ஸித்திக்கிறபர்யந்தம் என்னிடத்தில் ப்ராபகத்வேந அத்யவஸாயம். ஜ்ஞாநிக்கு நானே ப்ராபகனும் ப்ராப்யனுமாகையால் என்னோடு நித்யயோக மேற்படுவதால் ஜ்ஞாநி நித்யயுக்தனென்று சொல்லப் படுவன் என்றிருப்பதால் கேவலனுக்கு ஸாக்ஷாத்பலம் ப்ரஹ்ம ப்ராப்தியாயிருக்கும்பக்ஷத்தில் ஐசுவர்யார்த்தியோடு சேர்த்து, 'யாவத்ஸ்வாபிலஷிதப்ராப்தி' 'யாவத்ஸ்வாபிலஷிதப்ராப்தி' என்று சொல்லவேண்டியதில்லை. ஆனால் ஜ்ஞாநியைப்போல் அவ்யவதாநேந ப்ரஹ்மப்ராப்தியில்லாமல் அவாந்தரபலமான ஆத்மாநுபவத்தினுடைய வ்யவதாநத்தைப்பற்றி இப்படிச் சொல்லுமது கூடுமென்னில் மதுவித்யா நிஷ்டனையும் இந்தகோடியில்சேர்த்துச் சொல்லாமல் இவர்களைமட்டும் சொல்லுவது அநுபபந்நமேயாம். இன்னும் இந்த விஷயத்தில் நிரூபிக்கவேண்டிய அம்சங்கள் மேலேவரும்

தொடரும்

ஸ்ரீ:

# 'அருள்கொண்டாடுமடியவர்'
## வ்யாக்யானம்.

[ஸ்ரீவானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானு யெழுந்தருளியிருந்தவரும், ஸ்ரீ. உ. வே. பக்ஷிராஜையங்கார் ஸ்வாமி குமாரருமான வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(94ம் பக்கத் தொடர்ச்சி.)

𑌅𑌪𑌰𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃।
𑌕𑌥𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿॥

அபரம்பவதோஜந்ம பரம்ஜந்மவிவஸ்வத:
கதமேதத்விஜாநீயாம் த்வமாதௌப்ரோக்தவாநிதி

(அர்ச்சுனன் கண்ணபிரானை நோக்கிக்கூறியது:—உம்முடைய பிறவியானது இப்பால் (நான் பிறந்தகாலத்தில்) உண்டானது. சூரியனுடைய பிறவியானது முந்தியது. நீர் ஆதிகாலத்தில் (சூரியனுக்குச்) சொன்னீர் என்பதை எப்படி அறியக்கூடும்?)

என்று அர்ஜுனன் சங்கித்தாப்போலே நம்மாழ்வாருக்குப் பின்புள்ள ஆழ்வார்கள் நம்மாழ்வாரை அநுவர்த்தித்தார்களாயினும் இவருக்கு முன்புள்ள முதலாழ்வார்களும், திருமழிசைப்பிரானும் இவரை அநுவர்த்தித்தார்க ளென்னக்கூடுமோ வென்னில்; நம்மாழ்வாரை அவயவியாகவும் மற்ற ஆழ்வார்கள் இவருக்கு அவயவங்களென்றுசொன்னால் அதுதான்கூடுவதெங்ஙனே? அவயவாவயவிகளுக்கு அப்ருதக்ஸ்திதியன்றோ ப்ரஸித்தமாயிருக்கிறதென்னில் இவர்கள்பக்கல் அங்ஙனம் சொல்லவொண்ணாது. ஸம்ஸாரிகளான மற்றையார்கட்குச் சரீரஜந்மம் ப்ரதானம். "𑌜𑌨𑍍𑌮𑌨𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃" 'ஜந்மநாஜாயதே சூத்ர: கர்மணாஜாயந்தே த்விஜ:' என்று சாவித்ரி உபதேசத்தால் ப்ராஹ்மணஜந்மம் உண்டாமாப்போலே இவர்களுக்குப் பகவத் ப்ரஸாதத்தாலுண்டாகும் ஜ்ஞாநஜந்மமிறே ப்ரதாநம். "அன்று நான் பிறந்திலேன்" என்னுகின்றாரிறே இவர்களிலொருவர். அவர்கள் அவதாரம் த்வாபராந்தமா யிருந்தாலும் அநேகமாயிரம் வருஷம் சரமசரீரத்துடன் எழுந்தருளியிருந்தார்களாதலால்அவர்கள் கலியுகாதியில் நம்மாழ்வாரோடு * ஸமகாலத்தவராகவிருந்து அவரை அநுவர்த்தித்து அவர்

(1) * நம்மாழ்வார் அவதாரம் "𑌶𑌾𑌕𑍇 𑌕𑌲𑌿𑌷𑌿𑌕𑍇 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 43.

ப்ரபந்தத்தை அப்யஸித்து இவர்கள் ப்ரபந்தம் செய்தருளியிருப்ப ரென்னத் தட்டில்லை.

மற்றையாருடைய அவயவங்கள் போலே கேவலம் அசித்தா யிராதிறே நம்மாழ்வாருடைய அவயவங்கள். அவயவியோபாதி ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ஜ்ஞாநகுணகமாய் ஜ்ஞாத்ருத்வபோக்த்ருத் வாதி விசிஷ்டமாயிருக்கும். ஆகையிறே இவருடைய ப்ரபந்தங்கள் நான்கில் இயற்பா மூன்றும் வேதத்ரயம் என்றும், பண்ணார் பாடல் பண்புரை இசைகொள் வேதம் என்றும், இருந்தமிழ் நூல்புலவர் பனுவலாறும் அங்கமென்றும், மற்ற எண்மர் நன்மாலைகள் உபாங் கங்களென்றும் நிரூபித்துச்சொன்னது. "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூற வவதரித்தான்" என்று பெரியஜீயரும் அநுமோதித்தருளினர். இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத்" இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுபப்ராஹ்மயேத்" என்று உபப்ரஹ்ம பூர்வகமாகையிறே உபப்ரஹ்மணமிருப்பது. இத்தாலே வேதரூபமான நம்மாழ்வார் திவ்யப்ரபந்தங்களுக்குப் பூர்வபாவித்வமும் மற்றையாழ்வார் ப்ரபந் தங்களான அங்கோபாங்கங்களுக்குப் பச்சாத்பாவித்வமும் ஸித்தமா கையாலே மற்றையாழ்வார்களனைவரும் நம்மாழ்வாருக்கு அவயவ பூதரென்றும் அவர்கள் இவருடைய திருவாய்மொழியைப் பாடி ஆநந்தநிர்ப்பரரானார்களென்றும் சொல்லத் தட்டில்லை.

அப்ரதக்ஸ்திதி நிர்ப்பந்தமில்லாத இஃதொரு விலக்ஷணஅவ யவ அவயவிகள் ஏற்பட்டபடி யென்தான்! இத்தால் ஏற்பட்டது "சாயாவாஸத்வமநுகச்சேத்" 'சாயாவாஸத்வமநுகச்சேத்' என்று நம்மாழ்வாருக்குச்சாயைபோலேபரதந்த்ரர்களாயிருப்பர்கள் மற்றை யாழ்வார்களென்றபடி.

(தொடரும்)

---

(2) ஜயந்திமாலையில் சொன்னபடி த்வாபரயுகம் முதலாழ்வார்கள் ஜந்மாயிர்ஸஹஸ்ரே 862900.

த்வாபராந்தம் வித்தார்த்தி ஸூ. இவர்களெழுந்தருளியிருந்த காலம் அநேக வருஷங்களென்று சொல்லியிருப்பதால் 2000 ஸூங்களுக்குக் குறைவில்லை அவ்வாறும்போது கலியுகத்தில் 1100 ஸூ எழுந்தருளியிருக்கவேண்டும்.

(3) திருமழிசையாழ்வார் அவதாரம் ஜந்மாயிரஸஹஸ்ரே 862900 த்வாபரே வித்தார்த்தி ஸூ. இவரெழுந்தருளியிருந்தது 4700 ஸூ கலியுகத்தில் 3600 வருஷங்களெழுந்தருளியிருந்தார். (த்வாபரயுகத்திற்கு மொத்தம் ஸூ 864000.)